விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27

ஒலி 168 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 22 வெள்ளிக்கிழமை (05.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இளைஞன் கைது

### பொலிஸ் தரப்பு விளக்கம்

(கொழும்பு)

தாயகப்பாடலை பதிவிட்டமைக்கான பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கிளிநொச்சி இளை ஞன் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு விளக்கமளித் துள்ளது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

15ஆம் பக்கம் பார்க்க

## இளைஞன் சார்பில் உயர்நீதிமன்றில் மனு

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்



15ஆம் பக்கம் பார்க்க

## கிளி. பாடகருக்கு ஆதரவாக

## நாளை கவனயீர்ப்புப் போராட்டம்

(கிளிநொச்சி)

தாயகப்பாடல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி இளைஞனுக்கு ஆதரவாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்படவுள்ளது.

"குரல்வளையின் விலங்குடைக்க அணி திரள்வோம்" எனும் தொனிப்பொருளில் கிளி நொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றி யம் ஏற்பாடு செய்துள்ள

15ஆம் பக்கம் பார்க்க

## முதியோர் இல்லத்தில் பாரிய தீ விபத்து

- 12 பேர் பலி
- பணிப்பாளருக்கு மறியல்

(ஹொரணை )

ஹொரணை - பட்டகொட பகுதியிலுள்ள முதி யோர் இல்லத்தில் நேற்று

16ஆம் பக்கம் பார்க்க

## வலுக்கும் காற்றின் வேகம் கொந்தளிப்புடன் கடல்

### விடுக்கப்பட்டது செம்மஞ்சள் எச்சரிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு முதல் காங்கேசன்துறை, மன்னார், புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான

03ஆம் பக்கம் பார்க்க

# சர்வாதிகாரப் பயணத்தை நோக்கி நகர்கிறது அரசு

### ஹர்ஷண எம்.பி கடும் சாடல்

(கொழும்பு)



மாகாணசபைத் தேர்தலை நடத்தாது ஏமாற்றி வரும் தற்போதைய அரசாங்கம், சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்க ளுக்குள் தலையிட்டு நாட்டின் ஜனநாயகக் கட்டமை ப்பை முழுமையாக அழித்து ஒரு சர்வாதிகாரப் பயணத்தை நோக்கி நகர்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா குற்றஞ் சுமத்தினார்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அரசு பாரபட்சமாக கையாள்கிறது

### கிளி. இளைஞன் கைது குறித்து நாமல் எம்.பி



(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சி இளை ஞன் கைதானமை அரசாங்கம் பயங்கரவாதத்தடைச் சட்டத் தைப் பாரபட்சமான முறையில் - அரசியல் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்துவதற்கான உதாரணமாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப்புதைகுழி நேற்றும் 8 என்புத்தொகுதி அடையாளம்

(யாழ்ப்பாணம்)



செம்மணி மனிதப்புதை குழியில் இருந்து நேற்று வரை 283 மனித என்பு கூட்டுத்தொகுதிகள் அடை யாளம் காணப்பட்டுள்ள துடன் 279 மனித என்புக் கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள் ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## பேருந்துக் கட்டண உயர்வு

## போக்குவரத்து அமைச்சில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

டீசல் விலை உயர்வ டைந்ததைத் தொடர்ந்து, பேருந்துக் கட்டணங்களை 5 சதவீதம் வரை அதிக ரிக்குமாறு தனியார் பேரு ந்து சங்கங்கள் தொடர்ச்சி யாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில்,

இது தொடர்பான ஆரம் பகட்ட கலந்துரையாட லொன்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமை

02ஆம் பக்கம் பார்க்க

## 1990 சேவை முடங்காது!

(கொழும்பு)

1990 அவசர ஆம்புல ன்ஸ் சேவை (சுவ செரிய) முடக்கப்படவுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பா னவை என அதன் நிர்வாக சபை

03ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை அமுல்படுத்த நான் தயார்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சங்கற்பம்

(கொழும்பு)

முற்போக்கு தேசியவாத த்தை மையமாகக் கொண்டு 13 ஆவது அரசியலமைப் புத் திருத்தத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்த வும், அதற்குத் தடையாகக் காணப்படும் விடயங்களை நீக்கி அனைவரையும் ஒன் றிணைத்து பொதுவான இணக்கப்பாட்டை நோக் கிச் செல்லவும் நான் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்து ள்ளார்.

கொழும்பு பண்டார நாய க்க சர்வதேச மாநாட்டு மண் டபத்தில்

03ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன்.சிவகுமாரனின் நினைவேந்தல்

## தவிசாளர் நிரோஷிடம் வாக்குமூலம்



பொன்.சிவகுமாரனின் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்தமை தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் நேற்று கோப்பாய் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதன் பிரகாரம் விசாரணைகளுக்காக முன்னிலையான தவிசாளரிடம் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றினையும் பதிவு செய்துள்ளனர்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக முதல் வித்தாக நஞ்சருந்தி தன்னுயிரை ஆகுதியாக்கிய பொன்.சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல் உரும்பிராயில் அவரது உருவச் சிலையுள்ள பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாகவே குறித்த நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

# காணாமல்போன மீனவர்களை கடற்படையினர் தேடவில்லை

## கஜேந்திரன் குற்றச்சாட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சலசலப்பு

(கரணவாய்)

வடமராட்சி கடற்பரப்பில் காணாமல்போயிருந்த நான்கு மீனவர்களைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபடவில்லை என நேற்று (4) நடைபெற்ற வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செல்வராஜா கஜேந்திரன் குற்றம் சுமத்தினார்.

இதனையடுத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் கஜேந்திரன் முன்வைத்த குற்றச்சாட்டை மறுத்தனர். இதனால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

இதே வடமராட்சிக் கடலில் காணாமல்போன மீனவர்களைத் தேடும் பணிக்கு கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் சவாலாக இருந்தது என பருத்தித்துறை கடற்படை முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்ட போது பிரதிநிதிகள் சிலர் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (ந-7,60)

## போக்கு...

ச்சில் நேற்று (04) இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் மாத்திரம் டீசல் விலை 25 ரூபாவினால் உயர்வடைந்துள்ளதாகப் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திடீர் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, தினசரி பேருந்துச் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதில் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக தனியார் பேருந்து சங்கத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பேருந்து கட்டணத் திருத்தத்தை அனுமதிக்க வேண்டும் அல்லது தனியார் பேருந்து சேவைகளைப் பாதுகாப்பதற்காக எரிபொருள் மானியமொன்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேருந்து சங்கப் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலின்போது கோரியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து விரிவாக ஆராய்ந்து இறுதித் தீர்மானத்தை எட்டும் நோக்கில், போக்குவரத்து அமைச்சருடன் சந்திப்பொன்று விரைவில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதான வீதியில்
08 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி முகப்புடன் மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒருபரப்பின் விலை 1,200,000 (பன்னிரெண்டு இலட்சம்).
- பின்பகுதி இரண்டு பரப்பாகவும் ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் ஒரு பரப்பு எட்டு இலட்சம் முதல் ஆறு இலட்சம் வரை.
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த நிலம்.
- யாழ்.நகரில் இருந்து 4 Km தூரம்.

(2390)

077 988 6389, 076 077 2674




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127







# மரண அறிவித்தல்



## புண்ணியமூர்த்தி கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சின்னாலடி அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (04.06.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணி அவர்களின் அன்புக் கணவரும் சுபாஸ், சுதா, சுதேஸ், சுரேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோபனா, இலங்கேஸ்வரன், புஸ்பலதா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கீர்த்திலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் கனகம்மா, பொன்னம்மா, தங்கம்மா, மீனாட்சியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பிரியானா, டிசான், அபிசாந், வின்சிகா, யதுர்ஷா, லேனுகாந், அக்ஷயா, அபிசயன், அபிசானன் ஆகியோரின் அன்புப் பேரனும் தியாஸ்ரீ அவர்களின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சின்னாலடி,
அல்வாய்.

தகவல் :-
குடும்பத்தினர்

(C-5786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஹொரணை முதியோர் இல்லத்தில் பயங்கர தீ விபத்து!

- 11 பேர் தீயில் கருகி உயிரிழப்பு
- 7 பேர் வைத்தியசாலையில்



(களுத்துறை)

**களுத்துறை மாவட்டம், ஹொரணை, அங்குருவா தொட, பட்டகொட பகுதியில் உள்ள முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காணாமல் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இவ்விபத்தில் காயமடைந்த 7 பேர் ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தீ விபத்து காரணமாக இல்லத்தில் இருந்த சிலர் தீயில் கருகியுள்ளனர். அவ்வாறு தீயில் கருகிய 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சுமார் 51 பேர் எவ்வித ஆபத்துகளுமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டு, தற்போது பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில் அந்த இல்லத்திற்குள் சுமார் 72 பேர் இருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், தீ விபத்தினால் பராமரிப்பு நிலையத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (நி)

## சர்வாதிகார ...

தேசிய மக்கள் சக்தியின் தலைமைப் பீடமான பெலவத்தையின் நேரடித் தலைபீட்டின் கீழ் மாகாண சபைகளும் பிரதேச செயலகங்களும் சிதைக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர்,

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கும் தேவையான உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தைச் சுருக்கி, சர்வாதிகாரப் பாதையை நோக்கிச் செல்ல முயற்சிக்கிறது. மாகாண சபைத் தேர்தலைப் பற்றி யோசிப்பது கூட இல்லை. தேர்தல் மேடைகளிலும் தங்களது கொள்கைப் பிரகடனத்திலும், குறிப்பிட்ட காலத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம் என்று கூறினார்கள். ஆனால் இப்போது இரண்டு வருடங்களாகியும் தேர்தலை நடத்தாமல் ஏமாற்றி வருகின்றனர்.

ஜனநாயகக் கட்டமைப்பில் தேர்தல் நடத்துவது மிக முக்கியமான ஒன்றாகும். ஆனால் அதற்குத் தேவையான திருத்தங்களையோ அல்லது ஆதரவையோ பாராளுமன்றத்தில் வழங்குவதாகத் தெரியவில்லை. பல்வேறு சாட்டுக்களைக் கூறித் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சிக்கிறார்கள்.

தேர்தல்களை நடத்தாதது மட்டுமன்றி, பெலவத்தையின் தலையீடு அனைத்துத் துறைகளிலும் காணப்படுகிறது. இன்று சுயாதீன ஆணைக் குழுக்கள் என்று எதுவும் இல்லை. பெலவத்தையின் சக்திகள் சுயாதீன ஆணைக்குழுக்களுக்குள் நுழைந்து அவற்றின் சுயாதீனத் தன்மையை அழித்து வருகின்றன.

"நிலக்கரி ஆணைக்குழுவிலிருந்து இன்னும் சில மாதங்களில் நாங்கள் நிரபராதிகளாக விடுவிக்கப்படுவோம்" என்று அவர்களே கூறுகிறார்கள். இதில் எங்கே சுயாதீனத் தன்மை இருக்கிறது? நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்தும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

அதேபோல், உச்ச நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். மேல் நீதிமன்ற நீதிபதிகள் 63 வயதிலும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 65 வயதிலும் ஓய்வு பெற வேண்டும் என்று அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 20 ஆவது திருத்தத்தின் மூலம் நீதிபதிகளின் எண்ணிக்கை மேல் நீதிமன்றத்தில் 12 இல் இருந்து 20 ஆகவும் உச்ச நீதிமன்றத்தில் 11 இல் இருந்து 17 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இந்த அமைப்பிற்குள் தலையிட்டு நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்க இவர்கள் முயற்சிக்கிறார்கள். இதற்கு சட்டத்தரணிகள் சங்கமும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. ஏன் இந்த சுயாதீன நிறுவனங்களுக்குள் தலையிடுகிறார்கள்? இவர்களுக்கு சுயாதீன நிறுவனங்களை வைத்திருக்க விருப்பமில்லை. அனைத்தையும் பெலவத்தையின் கீழ் கொண்டுவந்து கட்டுப்படுத்தவே பார்க்கிறார்கள். இன்று மாகாண சபைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. ஜனாதிபதியின் ஆளுநர்களே இருக்கிறார்கள். அவர்கள் பெயரளவில் மட்டுமே ஆளுநர்களாக இருக்கிறார்கள். மாகாண சபைகள் முழுமையாகப் பெலவத்தையினால் நியமிக்கப்பட்ட நபர்களாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன.

இன்று ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் பெலவத்தையின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் ஆளுநர்களை விடவும் இந்த பெலவத்தையின் பிரதிநிதிகளுக்கே அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜனநாயகக் கட்டமைப்பை முழுமையாக அழித்து, ஒரு சர்வாதிகாரப் பயணத்தை நோக்கியே இவர்கள் நகர்கிறார்கள். இந்தச் செயல்களுக்கு எதிராக நாம் மக்களை அணி திரட்டுவோம், அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். மாகாண சபைத் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களை வழங்கி, நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் என்றார். (ந-7)

## 13 ஆவது ...

நடைபெற்ற தேசிய சமாதான பேரவையின் 2026 வருடாந்த சர்வமத மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்வேறு சமூகங்களின் பின்னணிகள், மதங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 9 மாகாணங்கள் மற்றும் 25 மாவட்டங்களிலும் வாழும் மக்கள் நட்புறவு, சகோதரத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி நடந்து கொள்ள வேண்டும்.

பேரிடர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ அல்லது மதத்தையோ இலக்கு வைத்து நடப்பதில்லை. நமது நாட்டு மக்கள் எந்தக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் பேரிடர் காலங்களில் மனிதாபிமானத்துடன் ஒன்றிணைகின்றனர். இந்த மனிதாபிமானம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்பட வேண்டும்.

நாட்டின் இறையாண்மையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க அனைவரும் பிளவுபடாமல் கைகோர்க்க வேண்டும். வெறுப்பும் பழிவாங்கலும் இல்லாத அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க அடக்குமுறைகளுக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தைகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் நடத்தி, நடுநிலையான நிலைப்பாட்டின் மூலம் தீர்வுகளை எட்ட வேண்டும்.

அரசியல் அதிகாரமும் பொருள் வளமும் இன்றி, குரலற்று அமைதி காத்திருக்கும் பெரும்பாலான மக்கள் சார்பாக நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும். இவர்களுக்காக ஒரு தேசிய நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட வேண்டும். பங்கேற்பு மற்றும் ஜனநாயக வழியாகவே ஒரு நாடு முன்னோக்கிச் செல்லும். எனவே, பெரும்பான்மை சிறுபான்மை என்ற பேதங்களை மறந்து, நடைமுறையில் மனிதாபிமானத்திற்கு முன்னுரிமை வழங்கி ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் நாம் முன்னோக்கி அடியெடுத்து வைப்போம் என்றார். (ந-7)

## 1990 சேவை...

அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக 1990 சுவ செரிய அறக்கட்டளையின் தலைவர் நிரோஷன் ரத்நாயக்க விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

1990 அவசர அம்புலன்ஸ் சேவையானது நாடு தழுவிய ரீதியில் தொடர்ச்சியாக இயங்கி வருவதுடன், வழமை போன்று பொதுமக்களுக்கான சேவைகளை மிகவும் உயர் தரமாகவும் திறமையாகவும் வழங்கி வருகிறது.

அதேபோன்று, இந்த மனிதாபிமான சேவை எதிர்காலத்திலும் எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

"அவசர தேவைகளுக்கு: 1990 அல்லது 1094 11 204 5801 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ள முடியும் என்றுள்ளது. (ந-7)

## வலுக்கும்...

கடல் நிலைமை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் செம்மஞ்சள் நிற எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 60 முதல் 65 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், கடல் அலை சுமார் 2 முதல் 3 மீற்றர் வரை உயர்வதற்குச் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை



## வாழ்க்கையில் வளர்ச்சி கூடும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**நிதானத்தை கடைப் பிடிக்கும் மகர இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான். 26.5.2026 அன்று 7ஆம் இடத்திற்கு வருகிறார். வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் இடம் ஏழாம் இடம் என்பதால், திருமண வயதில் இருப்பவர்களுக்கு வாய்ப்பு கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். வருமானம் உயரும். உடல் நலம் சீராகும். குடும்பத்தில் இதுவரை தாமதப்பட்டு வந்த சுபகாரியங்கள், ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். குறிப்பாக உச்ச குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மிச்சம் வைக்குமளவிற்கு பொருளாதார நிலை உயரும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குருபகவான். அவர் இப்போது உச்சம் பெற்று 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அவரது நேர் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகிறது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீங்கள் தேர்ந்தெடுத்தகளம் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் யோகம் உண்டு. அரசு பணிக்காக முயற்சி செய்திருந்தால் அது கைகூடும். உத்தியோகத்தில் தடைபட்ட பதவி உயர்வு தானாக கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். குடும்ப பிரச்சினையில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**வெற்றி தரும் குரு பார்வை**

நவக்கிரகங்களில் சுப கிரகமான குரு பகவான், உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு, 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. உங்கள் இராசியில் குரு பார்வை பதிவதால், சுபச்செலவுகள் அதிகரிக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும். தொழிலில் புதிய வாடிக்கையாளர் வந்திணைவர். வியாபாரத்தில் போட்டிகள் அகலும். இழந்ததை மீட்க புதிய முயற்சிகளை கையாளுவீர்கள். குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். புண்ணிய தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிட்டும். பொதுநலத்தில் ஈடுபட்டு புகழ் குவிப்பீர்கள். ஆலய திருப்பணிகளிலும் ஆர்வம் கூடும். கைநழுவி சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வந்துசேரும். வீரமும், விவேகமும் கொண்டு செயற்படுவீர்கள். பிரபலமானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணியாளர்களின் தொல்லை அகலும். 11ஆம் இடத்தை குருபகவான் பார்ப்பதால், தொழிலில் எதிர் பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு, புதிய பங்குதாரர்களை சேர்க்க முன்வருவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களிடம், மேலதிகாரிகள் இணக்கமாக நடந்து கொள்வர். இலாகா மாற்றம், இடமாற்றம் போன்றவை கேட்டபடி கிடைக்கும். வரவேண்டிய சம்பளபாக்கிகளும் வந்து சேரும். நெருங்கிய நண்பர் ஒருவரின் பழக்கத்தால் நீங்கள் செய்யும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

26.5.2026 முதல் 10.6.2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, விரயங்கள் அதிகமாக இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் வருவதற்கான அறிகுறி தென்படும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். கட்டிய வீட்டை பழுது பார்க்கும் யோகம் உண்டு. இக்காலத்தில் கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பது நல்லது. முக்கிய பொறுப்புகளை வேறு நபரிடம் ஒப்படைக்க வேண்டாம். அது முடிவடையாமல் பிரச்சினை உருவாகும். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். அதே நேரம் பழைய வழக்குகள் முடிவுக்கு வந்தாலும், புதிய வழக்கு தோன்றும்.

11.6.2026முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, தன வரவு தாராளமாக வந்து சேரும். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தனாதிபதியாகவும் விளங்குபவர், சனிபகவான். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் போது, கொடுக்கல் வாங்கல் சரியாகும். தொழிலில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு வியப்பர்.




11.8.2026முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும்போது, நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், புதன். அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, பொன், பொருள் சேர்க்கை உண்டு. பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். பழைய வீட்டை பழுது பார்க்கும் எண்ணம் நிறைவேறும். உத்தியோகத்தில் நீங்கள் பார்த்த மாற்றம் கிடைக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் வருவதை பயன்படுத்திக் கொள்வது நல்லது.

20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக் காலில் குருபகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும்போது, குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். மண வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும். சொந்த பந்தங்களின் ஆதரவு உண்டு. கடன் சுமை குறையும். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், அதற்கேற்ப ஊதியம் உயரும்.

**ராகு - கேது பெயர்ச்சிக் காலம்**

13.11.2026 அன்று ராகு - கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. மகர ராகுவும், கடக கேதுவும் மறக்க முடியாத சம்பவங்களை உருவாக்கப் போகிறார்கள். தற்போது தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு, ஜென்ம ராகுவாக மாறுகிறார். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது, சப் தம ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கை அமையும். எனவே, இக் காலத்தில் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை முறையாக செய்து கொள்வது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

சனிக்கிழமை தோறும் அனுமன் பதிகம் பாடி அனுமனை வழிபடுவது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் ஆதிரத்தினேஸ்வரர், சினேகவள்ளி அம்மனை வழிபட்டு வந்தால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

உச்சம் பெற்ற குருவின் பார்வை, உங்கள் இராசியில் பதிவதால் உன்னதமான வாழ்க்கை அமையும். வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோரின் ஆதரவு உண்டு. உங்கள் பெயரிலேயே அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் வாய்க்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர் பார்த்த ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

**குருவின் வக்கிர காலம்**

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்ரம் பெறும் போது, நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரும். விரயாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். விரயத்திற்கேற்ற வருமானமும் உங்களுக்கு வரும். எனவே, இக்காலத்தில் கட்டிய வீட்டை பழுது பார்க்கலாம். திருமணம் சம்பந்தமாக முயற்சி செய்தால் அதற்கான சீர்வரிசை பொருட்களை வாங்கலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு, கிடைக்கும் பொறுப்பு நல்ல பொறுப்பாக அமையும். வாழ்க்கை துணை வழியே பிரச்சினை வராமல் இருக்க விட்டுக்கொடுத்து செல்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.org

## யோஷித ராஜபக்சவிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

யோஷித ராஜபக்சவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக பிரதிவாதி தரப்பினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுசீராய்வு மனுவொன்று தற்போது நிலுவையில் உள்ளது.

இதன் காரணமாக, மேல் நீதிமன்றத்தில் இடம்பெறும் சாட்சிய விசாரணைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு அரச தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரச தரப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரை வழக்கின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தீர்மானித்தார்.

இதற்கமைய, வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என நீதிமன்றம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.(நி)

## 25 அத்தியாவசியப் பொருட்கள் ச.தொ.ச ஊடாக இறக்குமதி

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் ஊடாக 25 அத்தியாவசிய நுகர்பொருட்களை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுமக்களுக்கு தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் கிடைக்கப்பெறும் சில அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்து நுகர்வோர் மத்தியில் எழுந்துள்ள கவலைகளுக்குத் தீர்வுகாண்பதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

அத்துடன், வர்த்தக சந்தையில் இடைத்தரகர்கள் காரணமாக நுகர்பொருட்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவீனங்களைக் குறைத்து, அதன் மூலம் பொது மக்களுக்குக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்த நேரடி இறக்குமதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த புதிய இறக்குமதிப் பொறிமுறையின் ஊடாக, தரம் வாய்ந்த அத்தியாவசியப் பொருட்கள் எவ்வித தட்டுப்பாடுமின்றி மிகவும் மலிவான விலையில் நுகர்வோரைச் சென்றடையும் என அமைச்சு எதிர்பார்க்கிறது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 700 | 600 | 600 | 650 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | -- | 200 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 580 | 650 | 350 | 500 |
| தக்காளி | 650 | 700 | 600 | 650 | 450 | 650 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 180 | 200 | 200 | 130 |
| கோவா | 250 | 350 | 260 | 300 | 250 | 350 |
| கரட் | 400 | 480 | 350 | 500 | 450 | 450 |
| பூசணி | 120 | 120 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 300 | 250 | 200 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 80 | 100 | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 450 | 400 | 200 | 380 |
| பெரிய வெங்காயம் | 280 | 230 | -- | 240 | 200 | -- |
| பாகற்காய் | 1600 | 2000 | 2200 | 2400 | 1000 | -- |
| வெண்டக்காய் | 250 | 150 | 150 | 400 | 180 | 230 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 300 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 700 | 600 | 450 | 400 | 450 | 300 |
| லீக்ஸ் | 400 | 500 | 400 | 400 | 400 | 420 |
| பீற்றூட் | 500 | 450 | 350 | 600 | 350 | 475 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 600 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 700 | 700 | 600 | 800 | 750 | 475 |
| கத்தரிதம்புள்ள | 500 | 500 | -- | 550 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 110 | 200 | -- | 140 |
| தேசிக்காய் | 850 | 500 | 500 | 600 | 450 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 120 | 80-120 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 650 | 600 | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 300 | 180 | 400 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 120 | 80 | -- | 80 | -- | 45 |
| ஈரப்பலா | -- | -- | -- | 250 | -- | -- |

# மரண அறிவித்தல்

## திரு.நமசிவாயம் மயூரன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமாகாணம்)**



அல்வாய் மாறாம்புலம் நிலாவிலைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட திரு.நமசிவாயம் மயூரன் அவர்கள் 29.05.2026 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நமசிவாயம், சிவநேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் யோகேஸ்வரி(அபிவிருத்தி உத்தியோகத்தர்- அரச கால்நடை வைத்திய அலுவலகம்-கரவெட்டி) அவர்களின் பாசமிகு கணவரும், ஆருஷி, ஷாருஷி (யா/ப/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) சஞ்ஜித் (யா/நெ/மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும்,தபோஜினி முன்னாள் போதனாசிரியர்-முறைசாராக் கல்விப்பிரிவு) நிஜாந்தினி (ஆசிரியை தி/ஸ்ரீ சண்முக இ.ம.கல்லூரி-திருகோணமலை) அகிலன்(லண்டன்) பிரதீபன் (லண்டன்) சுகந்தி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், தவீந்திரன் (தொழில் திணைக்களம்-திருகோணமலை) கதிரேஸ்வரன்(லண்டன்) ரதிப்பிரியா(லண்டன்) ஆதிலட்சுமி(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 07.05.2026 அன்று Barnel community center Algernon Road,Hendon பிரித்தானியாவில் 2 p.m-4 p.mவரை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கான 5 p.m அளவில் எடுத்துச் செல்லப்படும்.

இறுதி அஞ்சலி நிகழ்வு மாறாம்புலம் நிலாவில், அல்வாய் வடமத்தி, அவரது இல்லத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவில் நடைபெறும் அன்னாரது இறுதி நிகழ்வுகளை நேரலையில் பார்வையிட முடியும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(2387)

**தொடர்புகளுக்கு**
மனைவி - 077 233 5916
தபோஜினி - 077 372 7796
நிஜாந்தினி- 077 466 6290

**தகவல்-குடும்பத்தினர்**
அகிலன் +447557649225
பிரதீபன் +447932339445
சுகந்தி [illegible]

மலர்வு 1980.05.24

உதிர்வு 2026.05.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவசாயிகளிடமிருந்து துரித கதியில் நெற்கொள்வனவை மேற்கொள்ளவேண்டும்

## ரவிகரனின் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக முல்லை அரச அதிபர் உறுதியளிப்பு



(முல்லைத்தீவு)

**சிறுபோக நெல் அறுவடைக்காலம் நெருங்கியுள்ள சூழலில், தாமதமின்றி துரித கதியில் விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சிறுபோக நெல் அறுவடைக்காலம் நெருங்கிவருகின்றது. இந்நிலையில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை விவசாயிகளிடமிருந்து துரித கதியில் கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? அல்லது கடந்த காலங்களைப்போன்று நெற்கொள்வனவில் தாமதங்கள் ஏற்படுமா?

அத்தோடு சிறுபோக நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்து களஞ்சியப்படுத்துவதற்கு நெல்சந்தைப்படுத்தல் சபைக்குரிய களஞ்சியசாலைகளில் இடவசதிகள் உள்ளதா?

இங்குள்ள நெற் களஞ்சியசாலைகளில் நெல் நிரம்பியிருப்பதாக அறியமுடிகின்றது.

அப்படியிருக்கையில் சிறுபோகத்தில் அறுவடைசெய்யப்படுகின்ற நெல்லை விவசாயிகளிடம் கொள்வனவு செய்து எங்கே களஞ்சியப்படுத்தி வைக்கப் போகின்றீர்களென்பது குறித்தும் உரியதரப்பினர் விளக்கம் தர வேண்டுமெனத் தெரிவித்தார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் பதிலளிக்கையில்,

இந்தவிடயம் தொடர்பாக விவசாயத்திணைக்கள பணிப்பாளர் நாயகம், நெல்சந்தைப்படுத்தல்சபையினர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயங்கள் தொடர்பில் தெரிவித்திருக்கின்றோம்.

பெரும்பாலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நம்புகின்றோம்.

குறிப்பாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சிய சாலைகளில், களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லை சந்தைப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. நெல் சந்தைப்படுத்தல் தாமதப்படுவதால்தான், விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் உரியதரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மாவட்டசெயலாளர் அ.உமாமகேஸ்வரன் இதன்போது பதிலளித்தார். (8)

## சங்கானை பிரதேச வைத்தியசாலையை சிறீதரன் எம்.பி பார்வையிட்டார்



(சாவகச்சேரி)

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவில் இயங்கும் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் அவர்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந் தார்.

இதன்போது, வைத்தியசாலையின் குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டதுடன், நோயாளர் விடுதி உள்ளிட்ட வைத்தியசாலையின் வெளிவளாகப் பிரதேசங்களையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சங்கானை பிரதேச வைத்திய சாலையை ஆதார வைத்திய சாலையாக தரம் உயர்த்துவது தொடர்பாக தன்னாலான முழுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என பிரதேச வைத்திய அதிகாரியிடம் அவர் உறுதியளித்தார். (8)

## ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 07.06.2026 அன்று காலை 9 மணிக்கு மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(மாங்குளம்)

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி



(சாவகச்சேரி)

புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி மற்றும் வீதி நாடக நிகழ்வு தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

"போதைப் பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கிய மான வாழ்வை அடைவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் புத்தூர்ச் சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணி மீசாலைச் சந்தி வரை நடை பெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-30)

## ஸ்ரீ சித்தி விநாயகர் பாடசாலைக்கு நிழற்பிரதி இயந்திரம் வழங்கல்




(சாவகச்சேரி)

பிரித்தானியா - புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை சங்கத்தின் பிரதிநிதி கருணாகரன் நாவலன் ஊடாக புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்திற்கு புதிய நிழற்பிரதி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

2 இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய நிழற்பிரதி ( printer/copier ) இயந்திரத்திற்கான நிதியுதவியினை பிரசுதன் வன்னியசிங்கம் ( பிரித்தானியா ) வழங்கியிருந்தார். (8-30)

## சொற்பொழிவு

(சாவகச்சேரி)

பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவு-2026 எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் முன்னோடியான புற்று நோய் சிகிச்சை: அனுபவங்களும் நீடித்த பாடங்களும் என்னும் கருப்பொருளில் இலங்கை புற்று நோய் நிறுவனத்தின் ஆலோசகர் மருத்துவர் நடராஜ் ஜெயக்குமாரன் நிகழ்த்தவுள்ளார். (8)

## அல்வாய் படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல்




(கரணவாய்)


வடமராட்சி "ஒபரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கை மூலம் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத் தில் 29.05.1987 அன்று நூற்றுக்கானக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

வடமராட்சி மைக்கல் நேசக்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் அல்வாய் படுகொலையின் 39 ஆவது நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அனைத்து பரீட்சைகளுக்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயம்

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படும் அனைத்து பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, 2026 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட்டையை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டையைத் தயார் படுத்திக் கொள்வது பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விண்ணப்ப செயல் முறைகளை ஒழுங்குபடுத்தவும், விண்ணப்பதாரர்களின் தகவல்களை துல்லியமாக உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, தேசிய அடையாள அட்டை இதுவரை பெறாத மாணவர்கள் மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் அதனை விரைவாகப் பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

# மணிவிழா வாழ்த்து

திருமதி.

**விஜயகுமாரி ஜெயரூபன்**

(S.L.T.S-I, பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
(பகுதித்தலைவர் ஆரம்பக்கல்வி)



**சேவை விபரம்**

- **யா/ இணுவில் மத்திய கல்லூரி** 28.03.1990–06.01.1997
- **யா/ இராமநாதன் கல்லூரி** 07.01.1997–10.02.2010
- **யா/ இணுவில் இந்துக் கல்லூரி** 11.02.2010–01.01.2019
- **யா/ இராமநாதன் கல்லூரி** 02.01.2019–05.06.2026

*Congratulations*

36 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியராய், பகுதித்தலைவராய்ப் பணியாற்றி ஓய்வுபெறும் ஆசிரியைக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.

(7770)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | - மயிலிட்டி உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | - வெனடிற் விமல் பெண் இனிதா |
| விண்ணப்பதாரர் பெயர் | - வெனடிற் விமல் பெண் இனிதா |
| முகவரி | - மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை |

இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட் 05 இல் மயிலிட்டி வள்ளுவன் வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

மேலும் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் கமலச்சந்திரன் கீர்த்தனா முகதாவில் உறுதி இலக்கம் 3992 இல் 01.02.2026ஆம் திகதியில் நிறைவேறிய அறுதி உறுதியின் பிரகாரம் குறித்த வெனடிற் விமல் பெண் இனிதாவுக்கு சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியில் உள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் M.செல்வராசா அவர்களின் வரைபட இலக்கம் 4110.2026.01.25 இன் படி துண்டு 1 ஆகும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை வலி வடக்கு பிரதேச செயலகம் கிராம அலுவலகர் பிரிவு J/246 மயிலிட்டி இறை "இந்தன்" நிலப்பரப்பு 1குளி 7.72 இதற்கு எல்லைகள்.

| | |
|---|---|
| வடக்கு - | றோட்டு |
| கிழக்கு - | பாதை |
| மேற்கு - | வெள்ளவாய்க்கால் |
| தெற்கு - | செல்லையா மரிசையின் ஆதனம் |

மேற்குறித்த ஆதனத்தை **வெனடிற் விமல் பெண் இனிதா** என்னும் பெயரில் ஆதனப்பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு, யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(7758)

# 20 வீத மாணவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

(கொழும்பு)

இலங்கையில் ஐந்தில் ஒரு பாடசாலை மாணவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் உடல் பருமன் ஏற்படும் அபாயமும் உள்ளது என்றும் அவர் இதன்போது எச்சரித்தார்.

பெரியவர்களிடையே அதிகரித்து வரும் உடல் பருமன் விகிதங்கள் குறித்த கவலைகளை அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உடல் பருமன் 47வீதம் பெண்களையும் 30வீதம் ஆண்களையும் பாதிக்கிறது என்றும், எதிர்காலத்தில் இந்த புள்ளி விபரங்கள் முறையே 15 வீதம் மற்றும் 6 வீதம் ஆக [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (நி)


# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.03.2025 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 23.06.2026 திகதி வரை மீட்டெடுக்கப்படாத /புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 24.06.2026 மற்றும் 25.06.2026**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சாங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602

(C-5782)

PEOPLE'S BANK
Pride of the Nation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## நிபந்தனைகளுடனான போர் நிறுத்தத்திற்கு

# இஸ்ரேல்-லெபனான் ஒப்புதல்

(வோஷிங்டன்)

**இஸ்ரேலும் லெபனானும் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.**




இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான உறவின் எதிர்காலத்தை இரு இறையாண்மை கொண்ட அரசாங்கங்களே தீர்மானிக்க வேண்டும் என்பதை அனைத்து நாடுகளும் மீண்டும் உறுதிப்படுத்தின.

லெபனானின் எதிர்காலத்தைப் பணயக்கைதியாகப் பிடிக்கும் எந்தவொரு அரசின் அல்லது அரசு சாரா அமைப்பின் முயற்சியையும் அவை நிராகரித்தன என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

எனினும், ஏனைய நிபந்தனைகளுடன், ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லாவின் தாக்குதல்கள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டால் மட்டுமே இந்த ஒப்பந்தம் சாத்தியமாகும்.

நேற்று முன்தினம் புதன்கிழமை தெற்கு லெபனானில் இஸ்ரேலியத் தாக்குதல்களில் குறைந்தது ஒன்பது பேர் கொல்லப்பட்டதற்கும் ஏப்ரல் மாதம் முதலில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையற்ற போர் நிறுத்தத்தைச் சோதிக்கும் வகையில் ஹிஸ்புல்லா வடக்கு இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசியதற்கும் பின்னர் இந்த நிகழ்வுகள் நடந்துள்ளன.

தெற்கு லெபனானில் லிட்டானி நதியிலிருந்து எல்லை வரை இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியிலிருந்து அனைத்து ஹிஸ்புல்லா செயற்பாட்டாளர்களையும் வெளியேற்றுவதை இந்த ஒப்பந்தம் சார்ந்துள்ளது.

அனைத்து அரசு சாரா அமைப்புகளையும் தவிர்த்து, லெபனான் ஆயுதப் படைகள் அப்பகுதியின் பிரத்தியேக கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ளும் முன்னோட்ட மண்டலங்களை உருவாக்குவதற்கு அமெரிக்கா வழிகாட்டும் என்று அந்த அறிக்கை கூறியது.

திங்களன்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு பகுதி போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஒரு விரிவான உடன்படிக்கையை எட்டும் நோக்கில் மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இரு நாடுகளும் ஜூன் 22 அன்று மீண்டும் சந்திக்கும்.


எனினும் இந்த அறிவிப்பு குறித்து ஹிஸ்புல்லா இதுவரை பகிரங்கமாகக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (நி)

## நேபாளத்துடனான எல்லைப் பிரச்சினையில்

# மூன்றாம் தரப்பினருக்கு இடமில்லை

## இந்தியா திட்டவட்டம்





(டில்லி)

நேபாளத்துடனான தனது எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மூன்றாம் தரப்பினருக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்தது.

எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சீனா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் ஈடுபாட்டைப் பரிந்துரைத்து நேபாள பிரதமர் பாலன் ஷா தெரிவித்த கருத்துக்கள் குறித்து வெளியுறவு அமைச்சகத்திடம் கேள்விகள் குவிந்த நிலையில் இந்தியாவின் இந்த பதில் வந்துள்ளது.


இந்தியாவும் நேபாளமும் தங்களின் எல்லைப் பிரச்சினைகளின் அனைத்து அம்சங்களையும் கையாள்வதற்காக ஏற்கனவே இருதரப்பு வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளன என்று வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெயஸ்வால் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையின் பெரும்பகுதி தீர்க்கப்பட்டுவிட்டது என்றும் அவர் தெளிவுபடுத்தினார். (நி)

## 33 ஆண்டுகளுக்கு முன்னதாக ப...

# 84 வயது முதிய...

## 3 ஆண்டுகள் சிறை த...



(டில்லி)

பீகார் மாநிலத்தில் 33 ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட கொலை முயற்சி வழக்கில், 84 வயதான முதியவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தற்போது இணையத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

வைஷாலி மாவட்டத்தைச் சேர்ந்த தீப் ராய் என்பவருக்கு எதிராக 1992ஆம் ஆண்டு கொலை முயற்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் போரை நிறுத்த

## அமெரிக்க பிரதிநிதிகள் சபை தீர்மானம்

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பாராளுமன்ற அனுமதி இன்றி தன்னிச்சையாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் கட்டுப் படுத்தும் நோக்கிலான "போர் அதிகார தீர் மானம்" அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**



பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் மீது தாக்குதல்களைத் தொடுத்ததன் மூலம் ட்ரம்ப் அரசியலமைப்பை மீறியதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். போர் அதிகாரச் சட்டத்தின்படி, அமெரிக்கப் படைகளைப் போரில் ஈடுபடுத்திய பிறகு, ஜனாதிபதி பாராளுமன்ற ஒப்புதலைப் பெற 60 நாட்கள் அவகாசம் உள்ளது.

அந்தக் காலக்கெடு பல வாரங்களுக்கு முன்பே முடிந்துவிட்டது. தற்போது ட்ரம்ப் சட்டத்தை மீறுவதாக ஜனநாயகக் கட்சியினர் கூறுகின்றனர்.

ஈரான் போரிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுமாறு உத்தரவிடும் தீர்மானத்தை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது. ஆளும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினருடன் இணைந்து வாக்களித்ததை அடுத்து, இந்தத் தீர்மானம் 215 இற்கு 208 என்ற வாக்குக்கள் அடிப்படையில் நிறைவேறியது.

அமெரிக்க மக்களின் சார்பாக ட்ரம்புக்கு இது ஒரு முக்கியசெய்தி. ஈரானில் அவர் விரும்பித் தொடுத்த, சட்டவிரோதமான போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் இது என பிரதிநிதிகள் சபையின் வெளியுறவுக் குழு ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்தனர்.

3 மாதங்களுக்கு முன்பு போர் தொடங்கியதிலிருந்து, ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைக் கைவிடுமாறு ட்ரம்பைக் கட்டாயப்படுத்தும் ஒரு தீர்மானத்திற்கு, குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்தது இதுவே முதல் முறையாகும். இந்தப் போர் விவகாரத்தில் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், இது சட்டமாவதற்கு வெள்ளை மாளிகையில் ஒரு இறுதிச் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தனது இராணுவ அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் இந்த புதிய தீர்மானத்தை முடக்குவதற்கு ட்ரம்ப் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## ...திவான வழக்கு

## ...வருக்கு ...தண்டனை



...ந்தது. கிராமத்தில் ஏற்பட்ட தகராறு வன்முறையாக மாறியதையடுத்து இந்த வழக்கு தொடரப்பட்டது.

வழக்கின் விசாரணை பல ஆண்டுகளாக நீடித்த நிலையில், காவல்துறை 1993ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த சிலர் விசாரணை நிறைவடையும் முன்பே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆதாரங்களை ஆய்வு செய்த நீதிமன்றம், தீப் ராயை கலவரம், ஆயுதங்களுடன் கலவரத்தில் ஈடுபடுதல் மற்றும் கொலை முயற்சி ஆகிய குற்றங்களில் குற்றவாளி என அறிவித்தது. தற்போது 84 வயதாகும் தீப் ராய்க்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் நடைபெற்ற 33 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு, நீதித்துறை தாமதம் குறித்த விவாதங்களையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பலரும் விமர்சித்து வருகின்றனர். (நி)

# நான் இல்லை என்றால் இஸ்ரேல் இருந்திருக்காது

## மார்தட்டுகிறார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

நான் இல்லையென்றால், இஸ்ரேல் என்ற நாடு இருந்திருக்காது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது: ஈரான் மீதான போருக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு என்னை இழுத்துவிடவில்லை.

ஈரான் அணுஆயுதம் வைத்திருக்கக்கூடாது என்பதால் தான் இந்தப் போரை தொடங்கினேன். ஈரான் அணு ஆயுதம் பெற்றிருந்தால், அந்நாட்டிற்கு இஸ்ரேல் தான் முதல் இலக்காக இருந்திருக்கும்.

நான் மட்டும் இல்லை என்றால் இஸ்ரேல் என்ற நாடே இருந்திருக்காது. ஈரானுடன் ஒபாமா செய்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்ததை நான் ரத்து செய்ததில் இருந்து இஸ்ரேலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கின என ட்ரம்ப் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் மரநடுகை

(சாவகச்சேரி)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி அபிவிருத்திக் கழகமும் கிரீன் குளோப் அமைப்பும் இணைந்து சாவகச்சேரி நகர சபையுடன் இன்று காலை 6.30 மணிக்கு தனங்கிளப்பு வீதி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் ஆகிய இடங்களில் மரநடுகை நிகழ்வை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் என்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ்.சசிகரன் ஆரம்பித்து வைக்க உள்ளார்.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர், உபதவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக் கழக நிர்வாகத்தினர், தென்மராட்சியின் இயற்கை ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-30)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடத்திய 39 ஆவது சைவசமய அறிவு பரீட்சையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தரம் 9 வகுப்பில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த ஷா.தேவந்திஹா நிகழ்வின் பிரதம விருந்தினர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் ச.லலீசனால் வெண்கலப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.



# கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவருமான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் போது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களின் தற்போதைய முன்னேற்ற நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அதேபோல், அவற்றை விரைவாகவும் பயனுள்ளதாகவும் முன்னெடுக்க அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மேலும், பிரதேசத்தின் அபிவிருத்தியை வலுப்படுத்த அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், பிரதேச சபை தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள் பிரதேச வைத்திய அதிகாரி, மின்சார சபை உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர், பொலிஸ் பொறுப்பதிகாரி, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (8-60)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 12 இல் செவ்<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்:A/L, Business (Australia)<br>தொ.இ: B/16909 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி-பா- 19 1/2 2 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC,Engineer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16913 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 10 இல் சூரி செவ்<br>கி-பா-57<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு: Only Canada<br>தொ.இ: B/16910 | பிறப்பு -1997 - இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் - MSC,Architech<br>எதிர்பார்ப்பு - Engineer, Architech<br>தொ.இ: G/16916 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 7 இல் செவ்<br>உயரம்-5'5"<br>தகைமை/தொழில்- O/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>தொ.இ: B/16914 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ACCA,London<br>எதிர்பார்ப்பு: only London<br>தொ.இ: G/16917 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 12 இல் சூரிசெவ்<br>உயரம்:6"<br>தகைமை/தொழில் - MSC, Sales Assistant (London)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16915 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-அச்சுவினி<br>கி-பா-12<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC,TA<br>எதிர்பார்ப்பு - உயர்பதவிகள்<br>தொ.இ: G/16918 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 7இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16919 | பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்:மூலம் 12இல் செவ்<br>கி.பா: 26<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBA,HR Executive<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16879 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

05.06.2026
வைகாசி 22, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.34 மணிவரை
திருவோணம் பின்னிரவு 3.36 மணிவரை

சுப நேரம் -5.52-7.22 மணிவரை
இராகு காலம் -10.22-11.52 மணிவரை
உலக சுற்றுச்சூழல் தினம்

சந்திராஷ்டமம்- புநர்பூசம்.

வளவன்




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பிள்ளையாகச் செயற்படுவர்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வளர்ச்சி கூடும், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.




சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றைச் செய்யும் வாய்ப்புண்டு, மனநிறைவு கூடும், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும், உயர்வுமுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக நாட்டம் கூடும்.




விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும்.

அளவற்ற செல்வமுள்ளவர்களுக்கு அளவற்ற தேவைகளும் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02 XIX

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்





(நேற்றைய தொடர்ச்சி)

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனரமைத்துத் தருமாறு சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் கலாநிதி ஆறு.திருமுருகன் இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஊடாக விடுத்த கோரிக்கையை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொண்டது.

ஆலய நிர்மாணம் தொடர்பான விபரங்களை ஆலய பரிபாலன சபையிடம் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கேட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கிழக்கு மாகாணத்திற்குச் செல்கின்ற போது, திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் செல்வதற்கான ஏற்பாடு இந்திய வெளியுறவுத் துறையால் செய்யப் பட்டிருந்ததுடன் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான நிகழ்ச்சி நிரலிலும் சேர்க்கப் பட்டது.

இருந்தும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி செல்வது பாதுகாப்பானதல்ல என இலங்கை பாதுகாப்புத்துறை தனது அறிக்கையில் தெரிவிக்க, திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் நின்று போனது.

உண்மையில் பிரதமர் மோடி திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றிருப்பாராயின், திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்பை இந்திய மத்திய அரசு முழுமையாகப் பொறுப்பெடுத்து அதனை நிறைவேற்றி இருக்கும். எனினும் அது கைகூடாமல் போயிற்று.

இங்கு திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதங்களும் அந்த ஆலயத்திற்கான புனரமைப்பைக் காலம் கடத்தியது என்பதையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

ஆம், மன்னார் மாதோட்ட நன்நகரில் அமைந்த கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீச்சரநாதன் ஆலயத்தை இந்திய மத்திய அரசு புனரமைத்ததன் காரணமாக, இன்று அந்த ஆலயம் எழுச்சி பெற்றுள்ளது.

இதேபோன்று திருகோணமலையில் இருக்கக்கூடிய மாதுமை அம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இந்திய மத்திய அரசு புனரமைப்புச் செய்து தருவதற்கான சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் நிறையவே இருந்தன.

ஆயினும் உடனுக்குடன் காரியங்களை ஆற்றுவதில் நம் இனத்தில் இருக்கக்கூடிய பலவீனங்களும் பின்னடைவுகளும் ஆகவேண்டியவற்றை இழக்க வேண்டியதாக ஆக்கி விடுகின்றன என்ற உண்மையை இவ்விடத்தில் நாம் கூறித்தானாக வேண்டும்.

### இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம்

காலம் மாறிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு கணப் பொழுதும் மாற்றங்கள் நடந்தாகின்றன. புதுப்புதுச் சட்டங்கள், நிபந்தனைகள் உருவாகின்றன.

அதுபோல வெளிநாடுகளின் கொள்கை சார்ந்தும் மாற்றங்கள் நடந்தாகின்றன. அந்த வகையில் அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், இலங்கை தொடர்பில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்தியா சஜித் பிறேமதாசாவை மறைமுகமாக ஆதரித்திருந்தது.

எனினும் சஜித்தின் வெற்றி சாத்தியமற்றுப் போக, அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் ஜனாதிபதியானார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்தியா அவரை தனது நாட்டிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தது.

அவ்வளவு தான். ஜனாதிபதியாகப் பதவியேற்று, தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு ஜனாதிபதி அநுர செல்கிறார்.

இந்திய விமான நிலையத்தில் இருந்து தடல்புடலான வரவேற்பை இந்திய மத்திய அரசு அவருக்கு வழங்கியது.

பிரதமர் மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மூர் உட்பட மந்திரி பிரதானிகள் கூட்டாக நின்று; செங்கம்பள வரவேற்பை ஜனாதிபதி அநுரவுக்கு வழங்க, அவர் அடைந்த புளகாங்கிதம், பிரதமர் மோடி எங்கள் நாட்டிற்கு வரவேண்டும் என்பதாகப் பரிணமித்தது.

பிறகென்ன பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தருகிறார்.

தனது இந்தியப் பயணத்தின் போது இந்தியா தனக்கு வழங்கிய அமோக வரவேற்பால் அகமகிழ்ந்த ஜனாதிபதி அநுர; பிரதமர் மோடி க்கு மித்ர விபூஷண் எனும் இலங்கையின் உயரிய விருதை வழங்கி அவரை அன்பால் ஆட்கொண்டார்.

இங்குதான் பிரதமர் மோடி நெகிழ்ந்து போகிறார். அதன் விளைவாக இலங்கை தொடர்பான இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டில் நிறைந்த மாற்றங்கள் ஏற்பட்டன.

ஆம், கடந்த 02 ஆம் திகதி இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கியஸ்தர்களை அவர் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் வைத்து சந்தித்தார்.

இச் சந்திப்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதன்போது கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இந்தியத் தூதுவரிடம்; திருகோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புத் தொடர்பாக ஏலவே இந்தியாவிடம் விடுத்த கோரிக்கையை மீள வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர்; திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்பை மேற்கொள்வதற்கு இந்தியா தயங்கவில்லை.

ஆனால் அந்தக் கோரிக்கை இலங்கை அரசாங்கத்தினூடாக இந்தியாவுக்குக் கிடைப்பதற்கான வழிமுறைகளைச் செய்யுங்கள் எனக் கூறினார் என்பதற்குள் இந்தியாவின் மாற்றம் புரிகிறதல்லவா?


**புருசோத்தமன்**

(திங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின விடுதலையை உன்னதமாய் நேசித்தவர் பொன்.சிவகுமாரன்

## அவரது 52 ஆவது நினைவுதினம் இன்று



1974 ஆம் ஆண்டு தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் ஓர் தீவிர தொண்டனாகக் கடமையாற்றிய சிவகுமாரன் அம் மகா நாட்டின் இறுதி நாள் அன்று பொலிஸாரினால் நடாத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்டதன் விளைவாக அதற்குப் பொறுப்பானவர்களைப் பழி வாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டவர் தியாகி பொன். சிவகுமாரன்.

அவ் உள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது சிவகுமாரன் குண்டு வீசு நடாத்தி சுட முற்பட்டமைக்குக் காரணமாகும். அச் சம்பவம் வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழிவாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன் அத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைப் பலி கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

ஜனநாயகப் பாரம்பரிய வழியில் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது ஆயுதப் போராட்டத்தின் மூலமே அதனை அடைய முடியுமென்று 1970களிலேயே ஆயுதப் போராட்டத்திற்கான வித்தினை இட்டவர் தியாகி சிவகுமாரன். அது மட்டுமல்ல ஏற்கனவே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அவர்களின் கைகளில் பட்ட அனுபவத்தின் விளைவாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிகழுமேயானால் தன்னுயிரை தானே மாய்த்துக்கொள்வேன் என்று பல முறை எங்களிடம் கூறியதனை நிரூபித்தும் காட்டியிருக்கின்றார்.

உரும்பிராயில் பொன்னுத்துரை அன்னலட்சுமி தம்பதியினரிற்கு 26.08.1950 ஆம் ஆண்டு நான்காவது புதல்வனாக உதித்த சிவகுமாரன் செல்லமாக "திரவியம்" என எல்லோராலும் அழைக்கப்படுவார். யாழ். இந்துக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக் கொண்டு யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் அவர் கல்வி கற்கும் காலப்பகுதியில்தான் (1970 ஆம் ஆண்டு ஆரம்பத்தில்) சிவகுமாரனுடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.

ரின்பால் பேணியில் வெடிகுண்டு செய்வது பற்றியெல்லாம் அப்போதே எம்முடன் பேசுவார். எங்களுக்கு இந்த கதைகள் புதிது. அதனால் ஆச்சரியமாக கேட்டுக்கொண்டிருப்போம். தனது வீட்டுக்கு எங்களை கூட்டிக் கொண்டு சென்று வெடிகுண்டு தயாரிப்பது பற்றி எங்களுக்கும் பழக்கினார்.

வல்வெட்டித்துறையில் குட்டிமணியினால் நடாத்தப்பட்ட கோழிப் பண்ணைக்கு சென்று வெடிகுண்டுகள் தயாரிக்க பழகியுள்ளார் என்பதோடு அவரிடமிருந்து கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிகுண்டு தயாரிக்கும் பொருட்களையும் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதனை பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

சிறிமா அரசில் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்வொன்றிற்காக வந்திருந்தார். அவரது காரின் பின் ரயரிற்கு கீழே குண்டை வைத்துள்ளார் சிவகுமாரன். பிரதியமைச்சர் மேடையில் பேச்சை முடித்ததும், சாரதி காரை இயக்கி, பின்னால் செலுத்த முயல, குண்டு வெடித்துள்ளது. வெடிகுண்டு தயாரிப்பின் முதல் காலகட்டம் அது. அவற்றால் பெரிய பாதிப்புக்கள் வராது. அதனைத்தொடர்ந்த பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிவகுமாரனை பிணையில் எடுப்பதற்காக அவரது தாயாருடன் பல இடங்களிற்கும் சென்று முயற்சிகள் செய்தேன். அப்போதைய சட்டத்தின்படி பிணையெடுப்பதென்றால் கொழும்பிலுள்ள மேல்நீதிமன்றத்திற்குதான் செல்ல வேண்டும். அப்பொழுது மாகாண மேல் நீதிமன்றங்கள் கிடையாது. மேல்நீதிமன்றங்களில் எல்லா சட்டத்தரணிகளும் வாதாடவும் முடியாது. இராணி சட்டத்தரணிகள் மட்டுமே முன்னிலையாக முடியும்.

சிவகுமாரனின் தாயாரும் நானும் அமிர்தலிங்கத்திடம் சென்று விடயத்தை சொன்னோம். நீலன் திருச்செல்வத்தின் தந்தையார் திருச்செல்வத்திற்கு ஒரு கடிதம் தந்து அனுப்பினார்.

கொழும்பிலிருந்த திருச்செல்வத்தின் வீட்டுக்கு சென்றோம். அது பெரியதொரு மாளிகை. அழைப்பு மணியை அழுத்த, வெளியில் வந்தார். கடிதத்தை கொடுத்தோம். படித்துவிட்டு, "எங்களை கேட்டோ குண்டு வைச்சனீங்கள்" என பேசினார். ஒரு மாதிரி அவரை சமாளித்து, அவரை ஆஜராக வைத்தோம். சிவகுமாரன் பிணையில் விடுதலையானார்.

அவர் விடுதலையானபின் ஒருநாள், பல்கலைகழகத்தில் தமிழ் மன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுப் படிப்பை முடித்து வந்திருக்கும் உரும்பிராயைச் சேர்ந்த நண்பர் ஒருவரை சந்திக்க வருமாறு சிவகுமாரன் கேட்டார். அந்த நண்பரும் போராட்டத்தில் தீவிர ஆர்வமுள்ளவர் என்றார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டவர் சத்தியசீலன் என்பவராவார்.

அக் காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைகழகத் தரப்படுத்தல் முறை அறிமுகமானது. இனரீதியான தரப்படுத்தல்தான் முதலில் அறிமுகமானது. இதனால் எனது பல்கலைகழக வாய்ப்பும் தவறியது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென முடிவுசெய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ள பலரை இணைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினோம். மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகா உத்தமன், அரியரட்ணம் (புன்னாலைகட்டுவன்), இலங்கை மன்னன், முத்துகுமாரசுவாமி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், நடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மாணவர் பேரவை யென செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராக போராட்டம் செய்வதென முடிவு செய்தோம்.

இம் மாணவர் பேரவை உயர்தர மாணவர்கள் பலரை ஒன்றுதிரட்டி தரப்படுத்தலிற்கு எதிராக மாபெரும் ஊர்வலத்தினை நடாத்தியது மட்டுமல்லாமல் அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை தொடர்ந்து சுமந்து சென்ற அமைப்பாகவும் அமைகின்றது. மாணவர் பேரவையின் தரப்படுத்தலிற்கெதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது.

1976ஆம் ஆண்டு சிங்கள அரசுடன் சேர்ந்து நடக்கும் தமிழ் அரசியல் வாதிகளை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் முன்பு எடுத்த முயற்சியும் வாகனம் சேதமடைந்ததோடு துரையப்பா காலதாமதமாக வந்ததால் உயிர் பிழைக்க வைத்தது. இக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ் சிறையிலும், அநுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழ வேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளிற்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவிகேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தைத் திருடும் முடிவிற்கு சிவகுமாரன் வந்தார். அதுவும் அவ் வங்கியில் வேலை செய்த ஒரு ஊழியரின் தகவல்களின் அடிப்படையில்தான் அங்குள்ள பணத்தைக் கொள்ளையிடுவதற்குத் திட்டமிட்டார். இருந்தும் அச் செயற்பாடு அவரிற்குக் காலனாக மாறிவிட்டது. அக் கொள்ளைச் சம்பவத்திற்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகை கூட சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடும் சிவகுமாரன் ஒரு நாள் காலை உயர்த்தித் தூக்கி உடற்பயிற்சி செய்யும் போது கதவின் மேற்புறத்திலிருந்த திறாங்கு அவரின் காலில் குற்றி ஓர் காயத்தை ஏற்படுத்தியிருந்தது. வங்கியில் கொள்ளையிட முற்பட்ட போது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிஸாரும் பின் தொடரவே தோட்டங்களிற்கூடாக ஓடிய சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற போது பொலிஸார் அவரை நெருங்கிய போது சிவகுமாரன் அப் பொலிசினுடைய தன்னியக்கத் துப்பாக்கியினைப் பறித்து அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அநுராதபுர சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தந்தையிடம் கையளித்துவிட்டு "உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்" எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார்.

சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல. தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதிக் கொடுமைகளை இள வயதிலிருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தன் இளம் வயதிலேயே உரும்பிராய் வயிரவர் கோவிலில் சமபந்தி போஷனத்தை நடாத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் மரண வீடுகளில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறை மேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார்.

தமிழ் மக்கள் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது. தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.

தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இப்போது உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது ஐம்பத்தி இரண்டாவது ஆண்டு நினைவு தினம் வழமை போன்று ஜூன் 5 ஆம் திகதி உரும்பிராயிலுள்ள அவரது சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் நடைபெறவுள்ளது.

**சி.தவராசா**
முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர்,
வடக்கு மாகாணசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்ம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அநுரவின் அரசாங்கம் வடக்கை ஓரங்கட்டி விட்டதா?

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் வடக்கு மாகாணத்தை ஓரங்கட்டி விட்டது போன்றதான தோற்றப்பாடு தெரிகிறது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தென்பகுதி மாகாணங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள உயர் அதிகாரிகளிடம் வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுகிறார். கூடவே அவர்களிடம் கேள்விகளை முன்வைத்து தென் மாகாணங்களின் அரச நிர்வாகச் செயற்பாடுகளை மீள் வலிமைப்படுத்துகிறார்.

இது தவிர, அரச கணக்காய்வுத் திணைக்களம் அங்குள்ள அரச அலுவலகங்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்வதுடன் தேங்கியுள்ள அரச பணிகளை விரைந்து நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

ஆனால் சுயநிர்ணய உரிமையைக் கேட்டதற்கான தண்டனை போல வடமாகாணம் ஓரங்கட்டப்பட்டுள்ளது.

அதாவது நீங்களும் உங்கள் பாடும் என்பது போல மத்திய அரசு எங்களை ஒதுக்கிவிட, இங்குள்ள அப்பாவிப் பொதுமக்கள் அரச நிர்வாக இயந்திரத்திடம் இருந்து சேவையைப் பெறுவதற்காக ஆற்றலைகின்றனர்.

உண்மை. வடமாகாண மக்கள் அரச திணைக்களங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய அலுவல்களைச் செய்து முடிப்பதில் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். எனினும் இதுபற்றி எவரும் கவனிப்பதாக இல்லை.

உண்மை. வடமாகாணத்தில் மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் உள்ளதாயினும் அதன் மேற்பார்வையூடாக இங்குள்ள நிர்வாகங்களைச் செம்மை செய்ய முடியவில்லை.

ஆம், வடமாகாணத்தில் ஓய்வு பெற்றவர்கள் தங்களுக்கான ஓய்வூதியத்தை உரிய காலத்தில் பெற முடியாமல் உள்ளனர்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் நிகழ்நிலைத் தளத்தினூடாக தகவல்களை ஏற்ற முடியாதவாறு குறித்த நிகழ்நிலைத் தளம் மூடப்பட்டுள்ளதான தகவலோடு முகாமைத்துவ உதவியாளர்களின் கருமம் முடிந்து விடுகிறது.

இதனால் ஓய்வு பெற்ற பலர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அலைகின்றனர்.

உண்மை. ஓய்வுபெற்ற ஒருவர் ஒருமாத கால இடைவெளியில் தனக்கான ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் செய்ய வேண்டும் என்பது அரசின் நிலைப்பாடாக இருக்க, நடைமுறையில் மாதங்கள் பல கடந்தும் ஓய்வூதியம் பெற முடியாத அவலத்தில் இங்கு பலர் உள்ளனர். இதுபோல பல்வேறு விடயங்களை அரச அலுவலகங்கள் சார்ந்து கூற முடியும்.

எனவே இது விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், அரச அலுவலகங்களில் சேவைகளைப் பெறமுடியாது அலைக்கழியும் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகளைப் பெற்று அதற்குரிய தீர்வை உடனடியாக வழங்கும் பொருட்டு விசேட ஏற்பாடுகளை – விசேட தொடர்பாடல் இலக்கங்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

இதற்கு மேலாக, மத்திய அரசின் மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் கணக்காய்வுத் திணைக்களம் என்பன வடமாகாணத்தில் அதிரடிப் பரிசோதனைகளை மேற்கொண்டு, அரச நிர்வாகம் எப்படியாக வடக்கில் உள்ளதென்பதை அறிவதும் அவசியம்.

இதைச் செய்யாவிடில், வடக்கின் அரச நிர்வாகம் விரைவில் பாரிசவாதப்படும் இது நிறுதிட்டமான உண்மை.

## வவுனியாவில் மாணவர்களை தாக்கிய சிறுவர் பாதாளக் குழு

### பொலிஸாரால் அதிரடிக் கைது

(வவுனியா)

சமூக ஊடகங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய 'வவுனியா சிறுவர் பாதாளக் குழு' தாக்குதல் சம்பவம் தொடர்பாக 7 மாணவர்களை ஈரட்டைப்பெரியகுளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். தாக்குதலுக்குள்ளான இரு மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் அண்மையில் அதிர்ச்சியூட்டும் காணொளி பரவலாகப் பகிரப்பட்டது. அதில் வவுனியா பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர், மற்’றுமொரு தரப்பைச் சேர்ந்த இரு மாணவர்களை மனிதாபிமானமற்ற முறையில் மிகக் கொடூரமாகத் தாக்கும் காட்சிகள் பதிவாகியிருந்தன. இச்சம்பவம் பொது மக்களிடையே பெரும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இக்காணொளி தொடர்பாக தீவிர விசாரணைகளில் இறங்கிய ஈரட்டைப் பெரியகுளம் பொலிஸார், தாக்குதலில் ஈடுபட்ட வவுனியா, ஈரட்டைப்பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 7 மாணவர்களை அதிரடியாகக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் 14 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த 15 வயதுடைய இரு மாணவர்கள், தற்போது வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 7 மாணவர்களும் நேற்று முன்தினம் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான், 7 மாணவர்களையும் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை கெபித்திகொல்லாவ சிறுவர் பராமரிப்பு (பரோல்) இல்லத்தில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஈரட்டைப்பெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,250)

## தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும்இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று(04) வியாழக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும், வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையை மேலும் மேம்படுத்துவதற்கான பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர், தலைவர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ந-7)

## உழவு இயந்திரம் ஊடாக கரைவலைத் தொழில்

### கட்டைக்காட்டில் 6 பேர் கைது

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் சட்ட விரோதமான முறையில் உழவு இயந்திரத்தைப் பாவித்து கரைவலைத் தொழில் செய்த ஆறு கடற்றொழிலாளர்களே கடற்படையினரால் நேற்று(4) கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வந்துள்ளன.

இதன் அடிப்படையில் வெற்றிலைக்கேணி கடற்படை மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், கட்டைக்காடு பகுதியில் சட்ட விரோதமான முறையில் உழவு இயந்திரத்தைப் பாவித்து கரைவலை தொழில் செய்த ஆறு கடற்றொழிலாளர் இரண்டு உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், உழவு இயந்திரம் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்களுடன் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ். நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,60)

## வடக்கின் வருவாயை அதிகரிப்பது அவசியம்

### ஆளுநர் வேதநாயகன் எடுத்துரைப்பு

வடக்கு மாகாண சபையின் வருவாயை அதிகரிப்பதன் ஊடாகவே எமது மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை மேலும் விரிவாக்கிக் கொள்ள முடியும். எனவே வருவாய்ஈட்டக்கூடிய அனைத்துத் திணைக்களங்களும் தமக்கான இலக்குகளை நிர்ணயித்துச் செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் ஊடாக வருவாயைப்பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்துவதில் சில சவால்கள் நிலவுகின்றன. சில இடங்களில் மாகாணத்துக்குச் சேரவேண்டிய வருவாய் இழக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் தவறான நடைமுறையொன்று தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டிருந்தால், அது சரி என்ற அடிப்படையில் அதனையே தொடர்ந்தும் முன்னெடுக்க முனையக் கூடாது. அந்தத் தவறுகளைத் திருத்தி, சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதனூடாகவே மாகாணத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியும். குறிப்பாக, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) நிதியை மாகாணத்தின் அபிவிருத்திக்குப் பெற்றுக்கொள்வதையும் நாம் உறுதிப்படுத்த வேண்டும் என்றார். (ந-7)

## நாகர் கோவில் காட்டுப் பகுதியில் குஷ் போதைவஸ்து மீட்பு

(கரணவாய்)

நாகர்கோவில் கிழக்கு பகுதியின் காட்டுப் பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் போதைப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெல்லியடி விசேட அதிரடிப் படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து அந்தப் பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது காட்டுப் பகுதியில் தீவிர தேடுதல் நடத்திய படையினர் அங்கு மிகவும் நுணுக்கமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த, சர்வதேச சந்தையில் அதிக பணப் பெறுமதியைக் கொண்ட 'குஷ்' போதைப்பொருள் அடங்கிய பாசல்களை மீட்டெடுத்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த நிறை மற்றும் அதன் துல்லியமான சந்தைப் பெறுமதி என்பவற்றை மதிப்பிடும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் உள்ள முக்கிய சூத்திரதாரி யார்? இவை எங்கிருந்து கொண்டு வரப்பட்டன? மற்றும் யாருக்கு விநியோகிப்பதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தன? என்பது குறித்து விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ந-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி-2026 சிலப்பதிகார விழா எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிந்தனை அரங்கு, பட்டிமண்டபம், கவியரங்கு, கதாப்பிரசங்கம், இலக்கிய ஆணைக்குழு, தமிழ் அமுதம் வழக்காடுமன்றம் போன்றன இடம்பெறவுள்ளன. (8)

# இரண்டாம் சங்கிலிய மன்னனின் 407 ஆவது சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

சங்கிலிய மன்னன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இரண்டாம் சங்கிலிய மன்னனின் 407 ஆவது சிரார்த்த தினம் யாழில் அமைந்துள்ள சங்கிலிய மன்னன் அரண்மனையில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னனின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஜமுனா ஏரி பகுதிக்கு ஊர்வலமாகச் சென்று பூஜை வழிபாடுகள் இடம் பெற்று பின்னர் சங்கிலிய மன்னனின் அரண்மனையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இம்முறை விசேடமாக சங்கிலிய மன்னனின் வாழ்க்கை வரலாற்றை கண்காட்சியாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில் குறித்த நிகழ்வுக்கு அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அறக்கட்டளையின் செயலாளர் அறிவித்துள்ளார். (8-33)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமான 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 05.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | அம்பாள் சனசமூக நிலையம் பேச்சி அம்மன் கோவிலடி |
| | மு.ப 11.00- பி.ப 01.00 | மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு |
| | பி.ப2.30- பி.ப 4.00 | கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி |
| 06.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | நடமாடும் சேவை |
| 08.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | முள்ளி வீதி அரியாலை |
| | மு.ப 11.00- பி.ப 01.00 | ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தி |
| | பி.ப2.30- பி.ப 4.00 | இராஜேஸ்வரி வீதி அரியாலை |
| 09.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | கனகரட்ணம் வீதி நாவலர் வீதிசந்தி அரியாலை |
| | மு.ப 11.00- பி.ப 01.00 | கனகரட்ணம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி |
| | பி.ப2.30- பி.ப 4.00 | பாரதி வீதி முதலியார் வீதிச்சந்தி அரியாலை |
| 10.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச்சந்தி அரியால்லை |
| | மு.ப 11.00- பி.ப 01.00 | பேரின்நாயகம் வீதி அரியாலை |
| | பி.ப2.30- பி.ப 4.00 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி |
| 11.06.2026 | மு.ப9.00-மு.ப.11.00 | சாஸ்திரியார் வீதி அரியாலை |
| | மு.ப 11.00- பி.ப 01.00 | அருளம்பலம் வீதி(சந்தனமாதா ஒழுங்கை) |
| | பி.ப2.30- பி.ப 4.00 | கச்சேரி கிழக்கு புகையிரத பாதை ( ஒழுங்கை) |

# கல்விச் செல்வம்



முனைவர் ச.மனோன்மணி


மனிதன் தேடும் செல்வங்களில் முதன்மையானது கல்விச் செல்வமே. மனித அறிவை மேம்படுத்துவது கல்விப்பயிற்சியே மழலை நிலையிலே கல்வி விளையாட்டாகவே ஊட்டப்படுகிறது. சிறுவர் நிலையிலிருந்து பள்ளிக்கல்வியாகத் திட்டமிட்டுப் பயிற்றப்படுகிறது. ஆனால் பண்டைக்காலத்தில் கல்வி வாய் மொழியாகக் கேள்வியும் மறுமொழியுமாகவே பயிற்றப்பட்டது. கற்றல் கருவிகள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

மனிதன் கண்டுபிடிப்புகளால் எழுத்துவடிவம் தோன்றிய போது கல்வி ஏட்டுக் கல்வியாக மாற்றமடைந்தது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் அச்சுப் பொறியின் பயன்பாடு வந்துசேர பாடநூற்கல்விப்பயிற்சி தொடங்கியது. பண்டைய மரபான இலக்கண இலக்கியக் கல்வியும் பரவலாக்கம் பெறவாயிற்று. இளமைக் காலமே கல்வியைப் பெறுவதற்கு ஏற்ற காலமாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முன்னோரின் முதுமொழியாகும்.

கல்வி என்பது கடல் போன்றது. அதன் ஆழமும் அகலமும் மிகவும் விரிவானவை. பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டாலும், கல்வியை இடைநிறுத்தாது தொடர வேண்டும் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது பழமொழி. வள்ளுவர் எண்ணும் எழுத்தும் கண் போன்றவை எனக் கல்வியின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார். ஒருவனுக்கு இருக்கும் இரண்டு கண்களும் அவன் எல்லாவற்றையும் நோக்கத் துணை நிற்கின்றன. எண் கல்வியும் எழுத்துக் கல்வியும் மனித வாழ்க்கைக்கு மிகவும் பயன்தருபவை. அவனுடைய வாழ்நாளிலே பெற வேண்டிய செல்வங்கள் எல்லாவற்றையும் பெற்றுத்தருபவை. அதனால் வள்ளுவர் கல்வியை அழிவில்லாத செல்வம் எனப் பதிவு செய்துள்ளார்.

பொதுவாகச் செல்வம் என்பது பொருளையே குறிப்பது. மேலும் பொருட் செல்வத்தால் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எளிதாகப் பெறலாம் என்பது பலருடைய நம்பிக்கையாகவும் உள்ளது. ஆனால் கவ்வியின் சிறப்பை முறையாக அறியாதவரே அவ்வாறு எண்ணிப் பொருளைத் தேடும் முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். கல்வியைக் கற்றவருக்குத் தன்னாட்டில் மட்டுமன்றிப் பிறநாடுகளிலும் சிறப்புக் கிடைக்கும். கல்வியறிவுடையோர் கண்ணுடையவர்கள். கல்வியறிவு அற்றவர்களுக்கு கண்ணிருக்குமிடத்தில் இரு புண்களே இருக்குமென வள்ளுவர் பதிவு செய்துள்ளார். அறிவுக்கண் அவர்களுக்கு இருக்காது.

கல்விச் செல்வம் பொருட் செல்வம் போன்றது அல்ல. இச் செல்வத்தை யாராலும் கவரமுடியாது. ஆனால் பொருட் செல்வத்தைக் கவர்த்து செல்ல முடியும். கல்விச் செல்வம் வெந்தழலால் வேகாது. வெள்ளத்தாலும் அழியாது. நாம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது. இன்னும் இன்னும் பெருகும். நாம் கற்றவற்றைப் பிறருக்குக் கற்பிக்கும் போது அறிவு மேலும் விரிவடைகிறது. அதனால் முன்னர் பெற்றிருந்த கல்விச் செல்வம் மேலும் பெருகும். இன்னும் கவ்விச்செல்வம் எம்மோடு என்றும் தொடர்ந்து வரும். ஒரு பிறப்பிலே பெற்ற கல்வி ஏழு பிறவிகளுக்கும் துணை செய்யும் தன்மையுடையது என்பர்.



## வெள்ளி நற்சிந்தனை 33

நாம் கற்ற கல்வி இன்னும் தேட வேண்டிய செல்வமாகும். கற்றது கைம்மண்ணளவு. கல்லாதது உலகளவு என்பர். இதனால் கவ்வியை நாம் முழுமையாகக் கற்று விட்டோம் என்று செருக்கடையக் கூடாது. கல்வியறிவால் தான் மட்டும் மகிழ்ச்சி அடையாமல் பிறரையும் கற்றறிந்தோர் மகிழ்ச்சியாக வைத்திருப்பர். அதனால் அவர்கள் மேலும் மேலும் கல்வியைக் கற்க விரும்புவர்.

இன்று பொறிமுறைக் கல்வி முறை வந்து விட்டதால் வகுப்பறைக்கல்வியைக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. தனியே ஓரறையில் இருந்து மடிக்கணனியின் துணை கொண்டு புதிய தொழில் நுட்பநிலையில் கற்பித்தல் நடக்கிறது. கற்பிக்கும் ஆசிரியர் மடிக்கணணித்திரையில் உரு க்காட்டி உரையாற்றுவார். அவரோடு கலந்துரையாடல் செய்யவும் முடியும். ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம். ஆனால் இக்கற்பித்தல் முறையைப் பயன்படுத்த எல்லோருக்கும் வாய்ப்பு இல்லை. எனினும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் பொறி முறைக்கல்வி இணையக் கலந்துரையாடலாக நடைபெறுகிறது. இம்முறையால் பலரோடு சேர்ந்திருந்து உரையாடும் வாய்ப்புக் கிடையாதுபோய் விடும்.

இளந்தலைமுறையினர் இப்புதிய முறையை விரும்புகின்றனர். அவர்கள் இன்னமும் கல்விச் செல்வம் மேலான செல்வம் என்று உணராதிருக்கின்றனர். பொறிமுறைக் கல்வியை விடப் பண்பாட்டுக் கல்வியே எதிர்காலத்திற்கு ஏற்றது என்பதை எவ்லோரும் உணர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பயங்கரவாதத்...

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். குறித்த பதிவில், கிளிநொச்சியைச் சேர்ந்த இளம் கலைஞர் ஒருவர் தனது 'ராப்' பாடல் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய உள்ளடக்கங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இசை மற்றும் கலைசார் வெளிப்பாடுகள் பயங்கரவாதம் சார்ந்த குற்றங்களாகக் கருதப்படுமாயின், அண்மையில் நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களின் போது தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் புலிகள் அமைப்பின் பாடல்களைப் பயன்படுத்திய போது இதே சட்டங்கள் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரசியல் இலாபங்களுக்காக இவ்வாறான பாடல்களைச் சமூக ஊடகங்களில் பகிரங்கமாகப் பகிர்ந்திருந்தார். அப்படியாயின் அப்போது பொலிஸ் எங்கே இருந்தது? பயங்கரவாதத் தடைச்சட்டம் எங்கே போனது?

சட்டத்தின்படி விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கமாகும். அந்த அமைப்பின் கொள்கைகளை எவரும் பரப்புவதையோ அல்லது மகிமைப்படுத்துவதையோ நாம் ஆதரிக்கவில்லை என்பதில் எமது நிலைப்பாடு தெளிவானது.

எனினும் ஒரு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு சாதாரண இளம் கலைஞரும் ஒரே மாதிரியான செயலைச் செய்ததாகக் குற்றம் சுமத்தப்படும் போது ஒருவருக்கு அரசியல் பாதுகாப்பும் மற்றவருக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதும் வழங்கப்படுவது முற்றிலும் தவறானதாகும்.

சட்டமானது அரசியல் வசதிகளுக்கு ஏற்ப வளைக்கப்படக் கூடாது. அரசியல்வாதிகளுக்கு ஒரு நீதியும் சாதாரண இளைஞர்களுக்கு வேறொரு நீதியும் வழங்குவதை ஒரு ஜனநாயக சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

## பயங்கரவாதச் சட்ட...

கடந்த 2026.05.31 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் தடை செய்யப்பட்ட அமைப்பான எல்.ரி.ரி.ஈ. (LTTE) அமைப்பை மீண்டும் ஊக்குவிக்கும் வகையில் பாடல்கள் பாடப்பட்டதாக சமூக ஊடகங்களில் பரவிய தகவலைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவின் குற்றவியல் விசாரணைப் பணியகத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடல்களைப் பாடியதாகக் கூறப்படும் கிளிநொச்சி, உதயநகர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் ஒருவர் கடந்த 2026.06.02 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் அவர் அன்றைய தினம் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியில் பாடிய இரண்டு பாடல்களை தனது சமூக ஊடகக் கணக்கில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் திருத்தி அமைத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இச்செயலானது 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 3 (உ) பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவதால் சந்தேகநபர் 2026.06.03 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர் 2026.06.17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொழுதுபோக்கு நிகழ்வுகளில் பாடல்கள் பாடுவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை என்ற தவறான தகவல் சில சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டு வருவதுடன் அவ்வாறான தகவல்கள் உண்மையல்ல என்பதை இலங்கை பொலிஸ் வலியுறுத்துகிறது.

நாட்டில் நடைமுறையிலுள்ள அடிப்படைச் சட்டமானது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்ட விதிமுறைகள் தொடர்பாகப் புரிதலுடன் செயற்படுவது நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளினதும் பொறுப்பும் கடமையுமாகும் என்பதை இலங்கை பொலிஸ் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறது என்றுள்ளது. (ந-7)

## கிளி. பாட...

குறித்த போராட்டமானது நாளை (06) காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக இடம்பெறவுள்ளது. (ந-7)

## இளைஞன்...

எழுச்சிப்பாடல் தொடர்பிலான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த இளைஞன் சார்பில் உடனடியாக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள சொல்லிசைக் கலைஞனான சங்கீதனைச் சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

அதன் பின் குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சங்கீதனை சட்டத்தரணியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை பரப்பு செயலாளருமான நடராஜர் காண்டீபன் நேற்றுக் காலை 09 மணியளவில் யாழ். சிறைச்சாலையில் சந்தித்துக் கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## செம்...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 16ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று நடைபெற்ற நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர்.

இதன்போது புதிதாக 8 மனித என்புக்கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டு 7 மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மொத்தமாக 283 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏற்கெனவே 279 மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அகழ்வில் சான்றுப் பொருட்களாக ஒரு மனித என்புத் தொகுதி நல்லடக்கம் செய்யப்பட்டதாக கருதப்படும் நிலையில் பிரேதப் பெட்டியினுடைய சில பாகங்கள் மீட்கப்பட்டது என்றார். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2026.06.04 — சீட்டிழுப்பு இலக்கம் 6208 — R 4 7 6 4 0 4
அத சம்பத — R 6 4 0 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0783
சுப தவசக் — திகதி 2026.06.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0324 — மீனம் 40 43 66 — 4955
தன நிதானய — திகதி - 2026.06.04 — சீட்டிழுப்பு இலக்கம் - 2238 — N 32 47 62 66 N
மெகா பவர் — திகதி 04/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2556 — S 07 20 46 55 63
ஜய — 2026.06.04 — 0476 — B 3 8 4 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4450 — சீட்டிழுப்பு திகதி 04.06.2026 — P 42 55 60 76
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1517 — விருச்சிகம் 06 43 55 59 விருச்சிகம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் தன சம்பத — 04.06.2026 — வெற்றி வாரம் 0916 — A 7 1 0 1 4 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,549,364.80
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3182 — 25000 பணப் பரிசு 58534 — சீட்டிழுப்பு திகதி 2026.06.04 — தினம் வியாழக்கிழமை — 21 22 25 62 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 131,207,402.40
சனிதா — திகதி 04.06.2026 — வெற்றி வாரம் 5343 — 01 14 48 67 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,418,530.80 — 50635
சசிரி — வெற்றி வாரம் 1012 — சீட்டிழுப்பு திகதி 04.06.2026 — வியாழக்கிழமை — 03 08 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,121,080.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4894 — சீட்டிழுப்பு திகதி 04.06.2026 — தினம் வியாழக்கிழமை — 12 33 38 49 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,022,872.80
கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — X 30 02 16 46 54 — 2358 — 04.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.284,078,600.00
அட கோட்டிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 3008 — சீட்டிழுப்பு திகதி 2026.06.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,263,992.80 — 01 12 15 46 V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-5784)

V2 TRAVELS

v2vacancies@gmail.com

076 1410725

0777 068 777



## பஸ் சேவை



விமான நிலையம், குடும்ப சுற்றுலாக்கள், ஆலய தரிசனங்களுக்கு செல்வதற்கான 19 ஆசனங்களுடன் குளிரூட்டப்பட்ட பஸ்சேவை.


(2391)

தொடர்புகளுக்கு:-

077 332 2433


## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 03 - 1945



இறப்பு 02 - 06 - 2026

# சண்முகம் தியாகராசா

## (புதுறோட், காரைநகர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 84, கல்லூரி வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தியாகராசா (ஓலுமடு நெடுங்கேணி) அவர்கள் கடந்த (02.06.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான A.S ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் துஷ்யந்தன் (லண்டன்), சாந்தன் (நீர்கொழும்பு), குகாமினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகலா, தாமரைச்செல்வி, தயாபரன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ஆகியோரின் மாமனாரும் வர்ஷன், திவிஷன், நர்த்தனா, அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் Dr.ஜெகதீஸ்வரி, விவேகானந்தராசா, உலகேஸ்வரி, ருக்மணிதேவி, நித்தியானந்தராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற Dr.திருநாதன் மற்றும் பூபதி, விக்னேஸ்வரமூர்த்தி, சிதம்பரநாதன், கிருஷ்னராணி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னம்பலம், பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி, சரோஜினிதேவி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2026) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் 84, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

84, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(C-5783)

தகவல் : குடும்பத்தினர்
077 167 9798

## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

1. பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்
ஒவ்வொரு பகிர்வுக்கும் பின்விளைவுகள் உள்ளன.

வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டும் தகவல்களை உணர்ச்சிவசப்பட்டோ அல்லது திட்டமிட்டோ பகிர்வது கோபத்தையும் வன்முறையையும் அதிகரிக்கிறது.

இத்தகைய பெரும்பாலான கட்டுக்கதைகள் மக்களின் உணர்வுகளை தன்னலத்திற்காக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டு மறைமுக அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பரப்பப்படுகின்றன.

**நிறுத்துங்கள், சிந்தியுங்கள், உறுதிப்படுத்துங்கள்**
வெறுப்பின் கருவியாக மாறாதீர்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது.

(7775)

## முதி...

முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தீவிபத்தையடுத்து முதியோர் இல்லப் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹொரணை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-7)

*(விரிவான செய்தி 03ஆம் பக்கத்தில்)*


## தேவை

**1. Labour/Helper**

தங்குமிடம் + சாப்பாடு வழங்கப்படும். நல்ல சம்பளம். உடனே join ஆகலாம்.


**2. விற்பனைப் பிரதிநிதி**

Two- wheeler & licence கட்டாயம்
விற்பனை அனுபவம் முன்னுரிமை.
நல்ல தொடர்புத்திறன்

(2388)

Sun Marketing Pvt Ltd
Call/WhatsApp: 076 139 1993


# மரண அறிவித்தல்



மலர்வு 20.12.1949

உதிர்வு 03.06.2026

# திரு. நல்லதம்பி பத்மநாதன்

## (ஓய்வுபெற்ற நூலகர், சமாதான நீதவான்)

அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பத்மநாதன் அவர்கள் கடந்த (03.06.2026) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - மீனாட்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பாக்கியம், சரஸ்வதி, அன்னலட்சுமி, செல்வரத்தினம் மற்றும் தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர்), பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரன் (ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் குகநாதன் (கனடா), ராஜ்குமார், சர்மிளா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மருதங்கேணி), தினேஸ்குமார் (பருத்தித்துறை பிரதேச சபை ஊழியர்), பிறேமிலா, பாலமனோகர் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தனுஜா (கனடா), தீபா, ஆனந்தகுமார், விக்கினேஸ்வரன், கயானி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகனி, ஆரா, கோஜிதா, டபிஷன், வினுஷாந், அபிஷாந், விமலினி, சுகந்தா, ரிஷானா, லோஜிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.06.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அம்பன்,
குடத்தனை.

(2385)

தகவல் : குடும்பத்தினர்
077 879 2905
077 924 2911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 131, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.